**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.12.2012 A.M**

## தென் தமிழகத்தில் மழை வாய்ப்பு : பலத்த காற்றும் வீசும்

குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டிருக்கும் காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தென் கடலோர தமிழகத்தில் வெள்ளிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக் கடலில் அந்தமான் தீவுகளுக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது இப்போது குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதனால் தென் கடலோரத்தின் சில மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மழை பெய்து வருகிறது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: குமரிக் கடலில் உள்ள காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தென் கடலோர மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி தென் கடலோர தமிழகத்தில் சில இடங்களில் மழை பெய்தது. மற்ற பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவியது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

வானிலை முன்னறிவிப்பு: தென் தமிழக கடலோர பகுதிகளில் ஓரிரு இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும். மற்ற பகுதிகளில் வறண்ட வானிலையே காணப்படும்.

கடலோர தமிழகப் பகுதிகளில் தரைக்காற்று வேகமாகவும் பலமாகவும் வீசும். சென்னையை பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். தரைக்காற்று வேகமாக வீசும். அதிகபட்ச வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸô க இருக்கும்.

வியாழக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி, பாபநாசத்தில் 20 மி.மீ. மழையும், தூத்துக்குடி, அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு ஆகிய பகுதிகளில் 10 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

## காவிரி : 30 டிஎம்சி நீர் கேட்டு தமிழகம் மனு

காவிரி கண்காணிப்புக் குழு உத்தரவிட்ட 12 டிஎம்சியை சேர்த்து, குறைந்தபட்சம் 30 டிஎம்சி நீரை திறந்துவிட கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வியாழக்கிழமை மனு தாக்கல் செய்துள்ளது.

உச்ச நீதிமன்றத்துக்கு தற்போது குளிர்கால விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதால், காவிரி வழக்கு தொடர்பான விசாரணை ஜனவரி 4-ம் தேதி நடைபெறும்போது, இந்த மனுவும் விசாரணைக்கு ஏற்கப்படும் என்று தெரிகிறது.

மனு விவரம்:

தமிழகத்துக்கு வினாடிக்கு 10,000 கனஅடி நீரை டிசம்பர் 5-ம் தேதி முதல் 10-ம் தேதி வரை திறந்துவிட வேண்டும் என்று கர்நாடகத்துக்கு கடந்த 5-ம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால், டிசம்பர் 6-ம் தேதி இரவு 10 மணிக்குத்தான் காவிரி நீரை கர்நாடகம் திறந்து விட்டது. அதை 9-ம் தேதி நிறுத்தி விட்டது.

டிசம்பர் 7-ம் தேதி கூடிய காவிரி கண்காணிப்புக் குழு, சம்பா சாகுபடிக்கு தேவையான நீரை கணக்கிடாமல் டிசம்பர் மாதம் முழுவதும் தமிழகத்துக்கு 12 டிஎம்சி நீரை திறந்து விட வேண்டும் என்று கர்நாடகத்துக்கு உத்தரவிட்டது.

அந்த உத்தரவு, ஒரு போக சாகுபடியைக்கூட செய்ய வழியில்லாத தமிழக விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும்.

டிசம்பர் மாதம் முழுவதும் 12 டிஎம்சி நீர் வழங்க வேண்டும் என்று காவிரி கண்காணிப்பு குழு பிறப்பித்த உத்தரவை கர்நாடகம் செயல்படுத்தவில்லை.

அந்த உத்தரவை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று காவிரி நதிநீர் ஆணையத்தில் கர்நாடக அரசு முறையிட்டுள்ளது. ஆனால், அந்த மனுவின் நகலை தமிழகத்துக்கு கர்நாடகம் வழங்கவில்லை.

காவிரி நடுவர் மன்ற இறுதி உத்தரவின்படி, கர்நாடகத்தின் நான்கு அணைகளில் இருந்து 103.2 டிஎம்சி நீரை மட்டும் பயன்படுத்த அந்த மாநில அரசுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ஆனால், டிசம்பர் 14-ம் தேதிவரை கர்நாடக அரசு 114.4 டிஎம்சி நீரை பயன்படுத்திவிட்டு "மேலும் நீர் தேவைப்படுகிறது' என்று கூறுவது நியாயமற்றது.

அணைகளில் நீர் இல்லை: டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் தமிழகத்தில் பயிரிடப்பட்டுள்ள சம்பா பயிர்களுக்கு தேவையான

நீர் தமிழக அணைகளில் இல்லை.

குறைந்தபட்சம் 18 டிஎம்சி நீரையாவது உடனடியாக வழங்க வேண்டும். அத்துடன் காவிரி கண்காணிப்புக் குழு அளித்த 12 டிஎம்சி நீரையும் சேர்த்து வழங்க கர்நாடகத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் தமிழக அரசு கூறியுள்ளது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 42 அடியாக சரிவு**

பவானிசாகர் அணையில் இருந்து இரண்டாம் போகம் புன்செய்ப் பாசனத்திற்கு திறந்துவிட்ட தண்ணீர் வியாழக்கிழமை நிறுத்தப்பட்டது.

சத்தியமங்கலத்தை அடுத்துள்ள பவானிசாகர் அணை மூலமாக, ஈரோடு மாவட்டத்தின் சத்தியமங்கலம், கோபி, பவானி, ஈரோடு, பெருந்துறை, காங்கயம் மற்றும் கரூர் மாவட்டத்தின் அரவக்குறிஞ்சி ஆகிய 7 வட்டங்களில் உள்ள 2.07 லட்சம் ஏக்கர் கீழ்பவானி பாசன விவசாய நிலங்கள் பயன்பெறுகின்றன.

நடப்பாண்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிட்டதால் அணைக்கு போதிய நீர்வரத்து இன்றி அணையின் நீர்மட்டம் வெகுவாகச் சரிந்து விட்டது.

கூடலூர் மலைச்சரிவில் இருந்து வரும் நீர் முதுமலை வனம் வழியாக மோயாற்றில் கலந்து அணைக்கு வந்து சேருகிறது. அதேபோன்று, மேல் பவானி, குந்தா, கெத்தை, பில்லூர் நீர்த்தேக்கங்களில் இருந்து வெளியேறும் தண்ணீரும் மேட்டுப்பாளையத்தில் பவானி ஆற்றில் சேர்ந்து அணைக்கு வந்து சேருகிறது. மோயாறும் பவானி ஆறும் அணைக்கு முக்கிய நீர்வரத்தாக உள்ளன.

தற்போது, கெத்தை, பில்லூர் ஆகிய நீர் மின்நிலையங்களில் போதிய தண்ணீர் இருப்பு இல்லாததாலும், மோயாற்றில் தண்ணீர் குறைந்ததாலும், அணைக்கு நீர்வரத்து குறைந்து அணை நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 42 அடியாகச் சரிந்துவிட்டது.

இதனால் கால்வாய்க்கு திறந்துவிடப்பட்ட 1,300 கனஅடி நீரும், ஆற்றுக்கு திறந்துவிடப்பட்ட 650 கனஅடி நீரும் வியாழக்கிழமை நிறுத்தப்பட்டது.

இரண்டாம் போகம் கீழ்பவானி புன்செய்ப் பாசனத்திற்கு, 15 நாள் திறப்பு மற்றும் 10 நாள் அடைப்பு என்ற முறையில் மீண்டும் டிசம்பர் 30 முதல் பிப்ரவரி 6ம் தேதி வரை தண்ணீர் திறந்துவிட வேண்டிய கட்டாயம் பொதுப்பணித் துறைக்கு ஏற்பட்டுள்ளது.

அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத நிலையில், கால்வாய்க்கு தண்ணீர் திறந்துவிட்டால் அணையின் நீர்மட்டம் மேலும் குறைய வாய்ப்புள்ளது. அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளதால் பொதுப்பணித் துறையினர் கவலையடைந்துள்ளனர்.

## இன்று மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம்த

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (டிச.21) நடைபெறுகிறது.

இதுகுறித்து, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் வெளியிட்ட செய்தி:

திருப்பூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் டிச.21-ஆம் தேதி காலை 11 மணிக்கு ஆட்சியர் அலுவலக அரங்கில் நடைபெறுகிறது. விவசாயிகள் தங்களது பிரச்னைகளை மனுக்கள் வாயிலாகத் தெரிவிக்கலாம்.

## தரமற்ற விதைகளை விற்றால் கடும் நடவடிக்கை

விவசாயிகள் தரமான விதைகளை வாங்கிப் பயன் பெற வேண்டுமென விதை ஆய்வுத் துறை துணை இயக்குநர் மா. மணிமாறன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது: விதை விற்பனை உரிமம் பெற்ற நிறுவனங்களிடம் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும், விதைகளை வாங்கும் போது, விவசாயிகள் விற்பனைப் பட்டியலை விற்பனையாளரிடமிருந்து பெற வேண்டும், விற்பனைப் பட்டியலில் விவசாயிகள் முழு முகவரியைக் குறிப்பிட வேண்டும்,மேலும் பயிர், ரகம், குவியல் எண், காலாவதி நாள் விவரங்கள் குறிப்பிடப்பட்டு விற்பனையாளர்

கையொப்பம் மற்றும் விவசாயிகள் கையெழுத்திட்டு வாங்க வேண்டும்.

அரசு விதிமுறைகளை மீறி தரமற்ற முறையில் விதைகளை யாராவது விற்பனை செய்வது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள விதை ஆய்வுத் துணை இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

## கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக மாறிய விளைநிலங்கள் !

ராமநாதபுரம் மாவட்டத்தில் போதிய மழையின்றி ஒரு லட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகியுள்ளன. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாக விளைநிலங்கள் மாறிப்போய் விட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயம், நெசவு, மீன் பிடித்தல் இவை மூன்றும் முக்கியத் தொழில்களாக உள்ளன. மாவட்டத்தில் உள்ள தாலுகாகளில் ராமேசுவரம் தாலுகாவைத் தவிர, மற்ற 6 தாலுகாகளிலும் உள்ள மக்களில் பெரும்பாலானோர் மழையை நம்பித்தான் விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். இந்த ஆண்டு போதிய மழையின்றி சுமார் 1.20 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள், மிளகாய் 20 ஆயிரம் ஏக்கர், பயறு வகைகள் 5000 ஏக்கர், கடலை 3000 ஏக்கர் வரை கருகிப் போய் விட்டதாகவும் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

நயினார்கோவில் வட்டாரத்தில் தொருவளூர், சின்ன அக்கிரமேசி உள்ளிட்ட

பகுதிகளிலும், கமுதி தாலுகாவில் கீழராமநதி, மேலராம நதி, கோவிலாங்குளம், முதல்நாடு, வல்லந்தை, டி.புனவாசல், முஷ்டக்குறிச்சி உள்ளிட்ட கிராமங்கள் உள்பட மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களில் தங்களது சொந்த விளை நிலங்களிலேயே ஆடு,மாடுகளை மேயவிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் திருவாடானை தாலுகாவில் மட்டும் சுமார் 42 ஆயிரம் ஹெக்டேர் நெற்பயிர்கள் முற்றிலுமாக அழிந்துபோய் விடும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் என்.முத்துராமு கூறியது:

இந்த ஆண்டு 5 நாள்கள் மட்டுமே மழை பெய்தாலும், அதுவும் பலத்த மழையாகவும் இல்லை. மாவட்டம் முழுவதும் விவசாயப் பணிகள் 70 சதவிகிதம்

முடிந்து பூச்சி மருந்து அடிக்கவும், உரம் போடும் பணிகள் மட்டும் பாக்கி உள்ள நிலையில், நெற்பயிர்கள் மழையின்றி கருகிப்போய் இருப்பது விவசாயிகளை மிகுந்த கவலைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

கமுதி தாலுகாவில் சோளம், கம்பு, பயறு வகைகள் முற்றிலுமாக அழிந்து விட்டன. மாவட்டத்தில் பெரும்பாலான கிராமத்துக் கண்மாய்களில் தண்ணீர் இல்லை. ஒருசில கண்மாய்களில் இருக்கும் தண்ணீரும் 10 நாள்களுக்குள் தீர்ந்துவிடும். எனவே, மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து ஓர் ஏக்கருக்கு வறட்சி நிவாரணமாக ரூ.25 ஆயிரம் வரை இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கிட வேண்டும். மாவட்டத்தின் பெரும்பாலான கிராமங்களில் விளை நிலங்களை ஆடுகளும், மாடுகளும் தான் மேய்ந்து கொண்டிருக்கின்றன. பயிர்க் காப்பீட்டுத் தொகையையும் விவசாயிகள் பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் சக்திமோகன் கூறியது:

பல்வேறு முகாம்கள் நடத்தி பெரும்பாலான விவசாயிகளை பயிர்க் காப்பீடு செய்ய வைத்துள்ளோம். பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்பு நடத்தி வருகிறோம். இதுவரை 22 ஆயிரம் ஹெக்டேர் பாதிப்பு இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. கண்மாய்களில் இருக்கும் தண்ணீரையும், கிணற்றுத் தண்ணீரையும் மழையில்லாமை காரணமாக மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்திடுமாறு விவசாயிகளிடம் அறிவுறுத்தி வருவதாகவும் சக்திமோகன் தெரிவித்தார்.

### துலாவூரில் இலவச கால்நடை மருத்துவ முகாம்

காரைக்குடி அருகே துலாவூர் கிராமத்தில் காரைக்குடி சிட்டி அரிமா சங்கம் சார்பில் தமிழக அரசு கால்நடை மற்றும் பராமரிப்புத் துறை மூலமாக இலவச கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாமில் சிட்டி அரிமா சங்கத் தலைவர் பாதம்பிரியான், துலாவூர் ஊராட்சித் தலைவர் சாந்தகுமாரி, கால்நடைத் துறை துணை இயக்குநர் கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கால்நடை மருத்துவர்கள் அன்புநாயகம், பிரகாஷ், கால்நடை ஆய்வாளர்கள் முத்தையா, ஆரோக்கியசாமி, சாந்தி, சரஸ்வதி ஆகியோர் 200-க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

முகாமுக்கான ஏற்பாடுகளை அரிமா சங்கத்தினர் செய்திருந்தனர்.

இந்தோ-திபெத்தியன் எல்லை போலீஸாக்கான தேர்வு - இணையதளத்தில் விண்ணப்பம்சிவகங்கை, டிச. 20: இந்தோ-திபெத்தியன் எல்லை பாதுகாப்பு போலீஸில் உதவி

சார்பு ஆய்வாளர் (ஸ்டெனோ), தலைமைக் காவலர் உள்ளிட்ட தொழில் நுட்பப் பிரிவில் 516 காவலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான விண்ணப்ப படிவம் மற்றும் விவரங்கள் ஜ்ஜ்ஜ்.ண்ற்க்ஷல்.ஞ்ர்ஸ்.ண்ய் என்ற இணையதளத்தில் உள்ளது. வேலை வாய்ப்பற்ற சிவகங்கை மாவட்ட முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோர் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் வே. ராஜாராமன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து, அதனை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் என ஆட்சியர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கொடைக்கா னலில் முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகம்

கொடைக்கானலில் முட்டைக்கோஸ் விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலை குறைந்து போனதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கொடைக்கானலில் செண்பகனூர், வில்பட்டி, அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, உகார்த்தே நகர், பள்ளங்கி, கோம்பை, மன்னவனூர், கிளாவரை, பூண்டி போன்ற கிராமப் பகுதிகளில், தற்போது பீன்ஸ், பட்டாணி, முட்டைக்கோஸ், முள்ளங்கி போன்ற காய்கறிகள் விளைவிக்கப்பட்டு வருகின்றன.

குறைந்த அளவு தண்ணீரே போதுமானது என்பதால், இம்முறை முட்டைக்கோஸ் அதிக விளைச்சல் கண்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தாலும், விலை குறைந்துள்ளதால் கவலையடைந்துள்ளனர். இங்கு விளையும் முட்டைக்கோஸ் மதுரை, திருச்சி, தேனி, திண்டுக்கல், கேரளம் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இது குறித்து, செண்பகனூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

கொடைக்கானல் உள்பட பல்வேறு கிராமங்களில் முட்டைக்கோள் அதிக அளவில் பயிரிடப்பட்டிருந்தது. இதற்கு, குறைந்த அளவு தண்ணீரே போதுமானது என்பதால், தற்போது நிலவும் தண்ணீர் பற்றாக்குறையான காலத்திலும் அதிக அளவில் விளைச்சல் கண்டுள்ளது. இங்கு

விளையும் முட்டைக்கோஸ் பல்வேறு இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. 10 கிலோ ரூ. 100 முதல் ரூ. 150 வரை விற்பனையாகும்.

ஆனால், இந்தாண்டு வெளி மார்க்கெட்டில் ஊட்டி, பெங்களூரு போன்ற இடங்களிலிருந்து அதிக அளவில் முட்டைக்கோஸ் விற்பனைக்கு வந்துள்ளதால், கொடைக்கானலில் இருந்து அனுப்பப்படும் முட்டைக்கோஸ் விலை இல்லாமல் இருந்து வருகிறது.

10 கிலோ ரூ. 70 முதல் ரூ. 90 வரையே விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
21.12.2012 A.M

## விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதி விவசாயிகளுக்கு புத்தூட்ட பயிற்சி அளிக்கப்பட்டது.
தியாகதுருகம் பி.டி.ஓ., அலுவலகத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் விதைசான்று துறை சார்பில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது. உதவி வேளாண் இயக்குனர் ராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.
பி.டி.ஓ.,க்கள் அன்பழகன், கலைச்செல்வி முன்னிலை வகித்தனர். விதை சான்று துறை துணை இயக்குனர் சந்துரு வரவேற்றார்.
ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊர்களை சேர்ந்த விவசாயிகள் பயிற்சியில் கலந்து கொண்டனர்.
விதை தேர்ந்தெடுத்தல், தரம் பிரித்தல், விதை நேர்த்தி செய்தல், மகசூலை பெருக்கும் வழிமுறைகள் குறித்து வேளாண் அலுவலர்கள் அன்பரசன், வேலாயுதம் பயிற்சியளித்தனர்.
இதில் தேவராஜ், தண்டபாணி பங்கேற்றனர்.

## விவசாயிகள் குழுவின் ஆலோசனைக்கூட்டம்

திருவெண்ணெய்நல்லூர்:விவசாயிகள் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.
திருவெண்ணெய்
நல்லூர் வட்டார வேளாண்மை விரிவாக்க அலுவலகத்தில் அட்மா குழு ஆலோசனைக்கூட்டம் நடந்தது. ஒன்றிய சேர்மன் மகாலட்சுமிஏகாம்பரம் தலைமை தாங்கினார்.
மாவட்ட வேளாண் துணை இயக்குனர் ரத்தினசபாபதி, வட்டார வேளாண் அலுவலர் மகாலட்சுமி முன்னிலை வகித்தனர். உதவி வேளாண் அலுவலர் பிரசன்னராஜ் வரவேற்றார்.
வேளாண் உதவி இயக்குனர் இளவரசன், 2012-2013ல் செயல்படுத்த வேண்டிய பல்வேறு திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். பின், அட்மா குழு தலைவராக கன்னாரம்பட்டு கிராமத்தை சேர்ந்த சேகர், ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.
வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜெயசுதா நன்றி கூறினார்.

## பருவமழை ஏமாற்றியதால்சொட்டு நீர் பாசனத்தில் விவசாயிகள் ஆர்வம்

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை ஏமாற்றி வரும் நிலையில், நீர் சிக்கனத்தை கருத்தில் கொண்டு விவசாயிகள் பலர் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறி வருகின்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தென் மேற்கு பருவமழை ஏமாற்றிய நிலையில், வடகிழக்கு பருவமழையும் எதிர்பார்த்த அளவு பெய்ய வில்லை. இதனால், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்களில், 40 முதல் 60 சதவீதம் மட்டுமே நீர் நிரம்பியுள்ளது. தற்போது, பனிக்காற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் மழைக்கான வாய்ப்புகள் குறைந்துள்ளது.ஆடிப்பட்டத்தில் பல விவசாயிகள் தங்கள் நிலங்களில் எதுவும் சாகுபடி செய்யமல் தரிசாக விட்ட நிலையில், கார்த்திகை பட்டத்தில் எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி செய்ய எதிர்பார்த்த நிலையில், எதிர்பார்த்த மழையில்லமாம் போனது.இதனால், விவசாயிகள் எண்ணெய் வித்து பயிர்களை சாகுபடி செய்வதை தவிர்த்து, குறைந்த நீர் தேவையுள்ள மக்காசோளம் மற்றும் ராகி பயிர்களை பயிர் செய்து வருகின்றனர். போதிய மழையின்மை காரணமாக நீர் ஆதாரங்களில் நீர் தேவை பூர்த்தியடையாத நிலையில், நிலத்தடி நீர் மட்டமும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

வேளாண் துறை சார்பில் மாற்று பயிர் செய்யவும், நீரை சிக்கனமாக பயன்படுத்தி பயிர்களை பாதுகாப்பது குறித்து அறிவுரைகள் வழங்கி வருகின்றனர். மாவட்டத்தில், பாலக்கோடு, தர்மபுரி, பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் விவசாயிகள் பலர் சொட்டு நீர் பாசன முறைக்கு மாறிய நிலையில், மாவட்டத்தில் பென்னாகரம் பகுதியில் தற்போதைய நீர் தேவையை கருத்தில் கொண்டு சொட்டு நீர் பாசன முறைக்கு மாறத்துவங்கியுள்ளனர்.வேளாண் மற்றும் தோட்டக்கலை துறை சார்பில் சொட்டு நீர் பாசனம் குறித்தும், சொட்டு நீர் பாசன முறைக்கு அரசு வழங்கும் மானியங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் விவாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்தும் வகையில், விவசாயத்துடன் கால்நடை வளர்ப்புக்கு முக்கியத்துவம் வழங்குமாறு வேளாண் துறை மூலம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## மழையின்றி மிளகாய் நாற்றுக்கள் "வீண்' மாற்று விவசாயத்திற்கு மாறிய விவசாயிகள்

முதுகுளத்தூர்:பருவமழை பொய்த்ததால், முதுகுளத்தூர் பகுதியில் சாகுபடி செய்துள்ள மிளகாய் நாற்றுக்கள் கருகி வீணாகின.

ஆண்டுதோறும் செப்., அக்., மாதங்களில், ராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யும். இதை நம்பி முதுகுளத்தூர், கமுதி, கடலாடி, பரமக்குடி போன்ற இடங்களில் விவசாயிகள் நெல், மிளகாய் விவசாயம் செய்வர். நடப்பாண்டு மழை பொய்த்ததால், சாகுபடி செய்த நெற்பயிர்கள், மிளகாய் நாற்றுக்கள் தண்ணீர் இன்றி வாடி, வதங்கி வருகிறது. கருகிய பயிர்கள், கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது. முதுகுளத்தூர்- கடலாடி ரோட்டில் நெற்பயிர்கள் முழுமையாக அழிந்துள்ளது. முதுகுளத்தூர்- பரமக்குடி ரோட்டில் கருக துவங்கியுள்ளது. மிளகாய் நாற்றுக்களும் "கை' விட்டதால், விவசாயிகள் மாற்றுப் பயிராக குதிரைவாளி, கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட

வறட்சியை தாங்கி விளையும் தானிய பயிர்களை நடவு செய்து, மனதை தேற்றி வருகின்றனர். கீழத்தூவல், விவசாயி ராமசாமி கூறுகையில், "" பருவ மழையின்றி ஏமாற்றத்தால் நெல் பயிர்கள் கருகின. மழையை நம்பி இனி புரயோஜனம் இல்லை என தெரிந்ததால், தற்போது மாற்றுப்பயிராக குதிரைவாளி, கேழ்வரகு போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளோம், என்றார்.

## இந்தியாவின் இயற்கை ரப்பர்இறக்குமதி 32 சதவீதம் உயர்வு



கொச்சி:நடப்பு நிதியாண்டில், நவம்பருடன் நிறைவடைந்த எட்டு மாத காலத்தில், நாட்டின் இயற்கை ரப்பர் இறக்குமதி, 32 சதவீதம் உயர்ந்துள்ளதாக,
கொச்சியை சேர்ந்த ரப்பர் வர்த்தக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.உள்நாட்டில், இயற்கை ரப்பர் உற்பத்தி குறைந்துள்ளது. அதேசமயம், சர்வதேச சந்தையில், குறிப்பாக, தாய்லாந்தின் பேங்காக் மற்றும் மலேசியாவின் கோலாலம்பூர் சந்தைகளில், இதன் விலை குறைவாக உள்ளது. இதனால், இந்திய வர்த்தகர்கள், அதிக அளவில் இயற்கை ரப்பரை இறக்குமதி செய்து வருகின்றனர். உலகில், இயற்கை ரப்பர் பயன்பாடு மற்றும் இறக்குமதியில், சீனா முதலிடத்தில் உள்ளது. பொருளாதார சுணக்க நிலையால், இயற்கை ரப்பருக்கான தேவை குறைந்துள்ளது. இதனால், நடப்பாண்டில், சீனாவில் இதன் பயன்பாடு, 15-20 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு நிதியாண்டின், ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான எட்டு மாத காலத்தில், இயற்கை ரப்பர் இறக்குமதி, 1.53 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.
இது, சென்ற நிதியாண்டின், இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதியை (1.15 லட்சம் டன்) விட, 32.5 சதவீதம் அதிகமாகும்.சென்ற நவம்பர் மாதத்தில், இதன் இறக்குமதி, 16,125 டன்னிலிருந்து, 22,748 டன்னாக உயர்ந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுதானிய அறுவடை பின் செய்நேர்த்திசெய்வது எப்படி?: இயக்குனர்

கரூர்: "சிறுதானியங்களுக்கு நல்ல விலை கிடைக்க, அறுவடைக்கு பின் செய் நேர்த்தி தொழில்நுட்பங்களை விவசாயிகள் எப்படி செய்ய வேண்டும்' என, வேளாண் வணிக துணை இயக்குனர் ரவி அறிவுரை வழங்கியுள்ளார்.இதுகுறித்து அவர் அறிக்கை:சோளம், மக்காச்சோளம்,

கம்பு, ராகி போன்ற சிறுதானிய பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அறுவடைக்கு பின் உரிய செய்நேர்த்தி தொழில்நுட்பங்களை முழுமையாக கடைபிடிக்காததால், அறுவடை செய்யும்போது போக்குவரத்து, பதப்படுத்துதல், எலிகள், பறவைகள், பூச்சிகள் மூலமாகவும் ஈரத் தன்மையினாலும் உற்பத்தி செய்த விளைபொருளில், 10 சதவீதம் சேதமாகிறது.சிறுதானியங்களான சோளம், கம்பு, ராகி, மக்காச்சோளத்துக்கு மாவுச்சத்து மற்றும் புரதச்சத்து அளவை பொறுத்தே கூடுதல் விலை கிடைக்கிறது. எனவே சிறுதானியங்களில் அறுவடையின் போது ஏற்படும் விரயத்தை குறைத்து, கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய, அறுவடைக்குப்பின் நேர்த்தி முறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். அதாவது கதிர்கள் முதிர்ந்து இலைகள் பழுப்பு நிறமாக மாறியவுடன், கதிர்களை மட்டும் தனியாக அறுவடை செய்ய வேண்டும்.

மழை நேரங்களில் அறுவடை செய்தால், ஈரமான புழு தாக்கிய கதிர்களை தனியே பிரித்து காய வைக்க வேண்டும். காயவைத்த கதிர்களில் இருந்து மணிகளை பிரித்தெடுக்க, கதிர் அடிக்கும் கருவிகள் அல்லது கல் உருளைகளை பயன்படுத்தி தானியத்தை பிரிக்க வேண்டும். பிரித்து எடுத்த மணிகளை காற்றில் தூற்றிவிட்டு, அதில் கலந்துள்ள இலைகள், சருகுகளை நீக்க வேண்டும்.கல், மண், இதர தானியம், உடைந்த தானியங்களை தனியாக பிரித்து எடுக்க வேண்டும். சிறுதானியங்களை நன்கு காயவைத்து நிழலில் உலரவிட்டு பின்னர், சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி மூடி சேமிக்க வேண்டும். உட்பக்கம் சவ்வுத்தாள் பொருத்திய சாக்கு பைகளில் சேமித்தால் மழைக்காலங்களில் ஈரக்காற்றினால் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கலாம்.அதிக காலம் சேமிக்க வேண்டியிருப்பின், தானியங்களை சேமிப்பு கலன்களில் இட்டு மூடி சேமிக்க வேண்டும். காயவைத்த தானியங்களை சேமித்து வைக்கும்போது, மாதம் ஒருமுறை வெயிலில் காயவைத்து ஆறவிட்டு, சேமிப்பது நல்லது. இல்லையெனில் வண்டுகள் தாக்கி, தரம் பாதிக்கப்பட்டு, நல்ல விலை கிடைக்காமல் போய்விடும்.எனவே, விவசாயிகள் மேற்கண்ட அறுவடை பின்நேர்த்தி முறைகளை கடைபிடித்து, சேதத்தை குறைத்து, கூடுதல் விலைக்கு விற்பனை செய்து பயன்பெறலாம்..

பாப்பாக்குடி பகுதி விவசாயிகளுக்கு வேளாண் அலுவலர் அறிவுறுத்தல்முக்கூடல் : முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் பாப்பாக்குடி வட்டார விவசாயிகளுக்கு கூறிஇருப்பதாவது: ஆசோஸ்பைரில்லம் உயிர் உரமானது காற்றில் உள்ள தழைச்சத்தை எடுத்து நெல் பயிரிருக்கு கொடுப்பதோடு மண்ணிலும் நிலை நிறுத்தும். இதனால் நெல் பயிரில் வேர் வளர்ச்சி அதிகமாகி பயிர் அதிக அளவில் தழைச்சத்தை எடுத்து நன்கு வளர்ந்து அதிக தூர்கள் உருவாகி பயிர் மகசூல் அதிகமாகும்.பாஸ்போபாக்டீரியா உயிர் உரமானது மண்ணில் பயிருக்கு கிடைக்காத நிலையில் உள்ள மணிச்சத்தை கரைத்து நெல் பயிர் எளிதில் மணிச்சத்தை எடுத்து மகசூலை பெருக்க வழி வகை செய்கிறது.ஒரு ஏக்கருக்கு தேவையான 24 கிலோ நெல் விதையை 24 லிட்டர் நீரில் ஊற வைக்கும் பொழுது அதில் இரண்டு பொட்டலம் நெல் அசோஸ்பைரில்லம்

மற்றும் இரண்டு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை கலக்க வேண்டும். இதன்மூலம் நெல் விதை முளைகட்டும்பொழுது உயிர் உரங்கள் அதில் ஊடுருவி செயல்பட்டு மேலும் பெருகும்.ஒரு ஏக்கருக்கு தேவையான நெல் நாற்றின் வேரினை நான்கு பொட்டலம் அசோஸ்பைரில்லம் மற்றும் நன்கு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா கலந்த கரைசலை 15 முதல் 30 நிமிடம் நனைத்து பின்பு நடவு செய்ய வேண்டும். மேலும் நடவு வயலில் நடவு செய்வதற்கு முன்பு 20 கிலோ பொடி செய்த நன்கு மக்கிய தொழு உரத்துடன் நன்கு பொட்டலம் நெல் அசோஸ்பைரில்லம் மற்றும் நான்கு பொட்டலம் பாஸ்போபாக்டீரியா உயிர் உரங்களை கலந்து வயலில் சீராக தூவவேண்டும். எக்காரணம் கொண்டும் ரசாயன உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களுடன் உயிர் உரங்களை கலந்து இட கூடாது. எனவே பாப்பாக்குடி பகுதி வட்டார விவசாயிகள் உயிர் உரங்களை அதிக அளவில் பயன்படுத்தி மண் வளம் கெடாமல் பாதுகாக்க வேண்டும். மேலும் உரச்செலவைக்குறைத்து அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நெற்பயிரில் குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

முக்கூடல் : முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் வெளியிட்ட செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:பாப்பாக்குடி வட்டாரத்தில் பிசான பருவ நெல் சாகுபடி பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த வருடங்களில் குருத்துப்பூச்சி தாக்குதலால் மகசூல் இழப்பு ஏற்பட்டு ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். இந்த வருடம் குருத்துப்பூச்சி தாக்குதலில் இருந்து பயிரை பாதுகாத்துக்கொள்ளும் தொழில்நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்.குருத்துப்பூச்சியின் தாய் அந்துப்பூச்சிகள் நெற்பயிரின் இலைகளின் நுனியில் குவியல் குவியலாக முட்டைகளிடும். இம்முட்டைகள் பழுப்பு மற்றும் மஞ்சள் நிற ரோமங்களால் மூடப்பட்டிருக்கும். இதில் இருந்து வெளிவரும் இளம் மஞ்சள் நிற புழுக்கள் நெற்பயிரின் தூர்களை தாக்கி சேதம் ஏற்படுத்தும். அப்போது பயிர் குருத்து வாடிவிடும். அந்த குருத்தினை கைகளால் உருவினால் எளிதாக வந்து விடும். குருத்தின் அடியில் பூச்சியினால் ஏற்பட்ட சேதமும் கதிரின் தண்டினை துண்டித்திருப்பதும் தெரியும். இந்த அறிகுறி தெரிந்தால் விவசாயிகள் உடனடியாக புரொப்பனோபாஸ் 50 சதம், இன்டோசோகார்ப் 14.50 சதம், கார்டாப் ஹெட்ரோகுளோரைடு 50 சதம் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை எடுத்துக்கொள்ள வேண்டும். திரவங்களான சாண்டோவிட், பைட்டோவிட், லிங்காவிட் ஆகியவற்றில் ஒன்றினை ஏக்கருக்கு 100 மி.லி வீதம் கலந்து சீராக தெளித்து குருத்துப்பூச்சியினை கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை தடுக்கலாம். மேலும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளில் ஒன்றான இனக்கவர்ச்சி பொறிகளை நெல் நடவு செய்த உடன் ஒரு ஏக்கரில் 4 எண்ணம் வீதம் வைத்து ஆண் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழித்து குருத்துப்பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் சங்கக் கூட்டம்

சிவகங்கை:சிவகங்கையில்,விவசாயிகள் சங்க மாவட்ட குழு கூட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் மாணிக்கம் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் ஆதிமூலம், பொருளாளர் வீரபாண்டி, துணை தலைவர்கள் பழனிவேல், சலேத்துராஜ், துணை செயலாளர்கள் சந்தியாகு, மாணிக்கம் பங்கேற்றனர். தீர்மானம்: மாவட்டத்தில்,நேரடி நெல் விதைப்பால் ஒரு லட்சம் ஏக்கர் நெற்பயிர் கருகிவருகிறது. வருவாய்துறையினர் ஆய்வு செய்து, நெல்லுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம், தோட்டக்கலை பயிர்களுக்கு ரூ.40 ஆயிரம், தானிய பயிர்களுக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்கவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

## மழையின்றி மிளகாய் நாற்றுக்கள் "வீண்' மாற்று விவசாயத்திற்கு மாறிய விவசாயிகள்

முதுகுளத்தூர்:பருவமழை பொய்த்ததால், முதுகுளத்தூர் பகுதியில் சாகுபடி செய்துள்ள மிளகாய் நாற்றுக்கள் கருகி வீணாகின.

ஆண்டுதோறும் செப்., அக்., மாதங்களில், ராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்யும். இதை நம்பி முதுகுளத்தூர், கமுதி, கடலாடி, பரமக்குடி போன்ற இடங்களில் விவசாயிகள் நெல், மிளகாய் விவசாயம் செய்வர். நடப்பாண்டு மழை பொய்த்ததால், சாகுபடி செய்த நெற்பயிர்கள், மிளகாய் நாற்றுக்கள் தண்ணீர் இன்றி வாடி, வதங்கி வருகிறது. கருகிய பயிர்கள், கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக மாறியுள்ளது. முதுகுளத்தூர்- கடலாடி ரோட்டில் நெற்பயிர்கள் முழுமையாக அழிந்துள்ளது. முதுகுளத்தூர்- பரமக்குடி ரோட்டில் கருக துவங்கியுள்ளது. மிளகாய் நாற்றுக்களும் "கை' விட்டதால், விவசாயிகள் மாற்றுப் பயிராக குதிரைவாளி, கேழ்வரகு, கம்பு உள்ளிட்ட வறட்சியை தாங்கி விளையும் தானிய பயிர்களை நடவு செய்து, மனதை தேற்றி வருகின்றனர். கீழத்தூவல், விவசாயி ராமசாமி கூறுகையில், "" பருவ மழையின்றி ஏமாற்றத்தால் நெல் பயிர்கள் கருகின. மழையை நம்பி இனி புரயோஜனம் இல்லை என தெரிந்ததால், தற்போது மாற்றுப்பயிராக குதிரைவாளி, கேழ்வரகு போன்ற பயிர்களை சாகுபடி செய்துள்ளோம், என்றார்.

## கொடைக்கானல் கொய்மலர்களை வெளிநாட்டினர் இணையதளம் மூலம் வாங்கவும் , விற்கவும் ஏற்பாடு

கொடைக்கானல்:கொடைக்கானலில் உற்பத்தியாகும் "கார்னேசன்' கொய்மலர்களை புவிசார்ந்த தகவல் முறையில் (ஜி.ஐ.எஸ்.,) மூலம் இடைத்தரர்கள் இல்லாமல், இணையதளத்தில் வெளிநாடுகளுக்கு விற்பனை

செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொடைக்கானல் தேசிய தோட்டக்கலை திட்டத்தில் நடப்பு நிதியாண்டு, பசுமைக்குடில்கள் மூலம்

கொய்மலர்கள் சாகுபடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கொடைக்கானலில் மன்னவனூர், கவுஞ்சி, பூம்பாறை, கூக்கால், தாண்டிக்குடி, பண்ணைக்காடுஆகிய இடங்களில் கொய்மலர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. உலக மார்க்கெட்டில் தரம் உள்ள கொடைக்கானல் "கார்னேசன்' கொய்மலர்கள் நன்றாக விற்பனையாகின்றன.

இடைத்தரகள் இல்லை: "கார்னேசன்' கொய்மலர்களை இடைத்தரர்கள் இன்றி வெளிநாடுகளில் விற்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும்ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக புவிசார்ந்த தகவல்முறை என்ற மென்பொருள் தொழில் நுட்பத்தின் உதவியால், கூக்கால் கிராமத்தில் குண்டுப்பட்டியில் பசுமைக்குடில்கள் கண்டறியப்பட்டுள்ளது.

இக்குடில்கள் இருப்பிடங்கள்

(நிலநிரைக்கோடுமற்றும் நிலநேர்க்கோடு), மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வகத்தில் செயல்முறைவடிவாக்கம் செய்யப்பட்டது. இணையதளத்தில் இதற்காக உருவாக்கப்பட்ட மென்பொருள் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் உலகத்தில் எந்த மூலையில் இருந்தும், இம்மலர்களை வாங்க விரும்பும் நிறுவனங்கள் இடைத்தரர்கள் இல்லாமல், விவசாயிகளிடமே நேரடியாக கொள்முதல் செய்யலாம். பசுமைக்குடில்களில் உற்பத்தி செய்யும் விவசாயி பெயர், கிராமம், சர்வே எண், பசுமைக்குடில் அமைக்கப்பட்டுள்ள பரப்பு, எந்த திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது, போட்டோவும் இணைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராஜாமுகமமது கூறிகையில்""கொடைக்கானலில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் சதுரமீட்டரில் பசுமைக்குடில்கள் உள்ளது. 1000 சதுரமீட்டர் பரப்பில் இருந்து ஒரு லட்சம் கொய்மலர்கள் சாகுபடி செய்யலாம். ஒருகட்டில் (20 பூக்கள்)விலை காலத்திற்கேற்ப ரூ.75முதல் ரூ.200வரை விற்பனை செய்யப்படும்.கிறிஸ்துமஸ், புத்தாண்டு, காதலர்கள் தினத்திற்கு ரூ.180 முதல் ரூ.200 வரை விற்கப்படும். புவிசார்ந்த தகவல்முறை மென்பொருள் தொழில்நுட்பத்தின் மூலம், விவசாயிகள் வருமானம் அதிகரித்துள்ளது," என்றார்.